- அகநானூறு
- அகநூல்
- 400 பாடல்கள்
- ஆசிரியப்பாவால் ஆனது
- பாடியவர்கள் 145 பேர்
- தொகுத்தவர் உருத்திர சன்மனார்
- தொகுப்பித்தவன் பாண்டியன் உக்கிரப் பெருவழுதி
- கடவுள் வாழ்த்துப் பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார்
- அகநானூற்றின் கடவுள் வாழ்த்து சிவனைப் பற்றியது
- மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது

1–120 பாடல் களிற்றியானை நிறை (120 பாடல்கள்)
121–300 பாடல் – மணிமிடைபவளம் (180 பாடல்கள்)
301–400 பாடல் – நித்திலக்கோவை (100 பாடல்கள்)

- சிற்றெல்லை 13 அடி பேரெல்லை 31 அடி
- இதற்கு நெடுந்தொகை என்ற பெயரும் உண்டு
- பாயிரம் பாடியவன் இடையள நாட்டு மணக்குடியான் பால்வண்ண தேவனான வில்லவதரையன்
- ஓர் ஒழுங்கு முறையில் தொகுக்கப்பட்ட ஒரே தொகை நூல் அகநானூறு
- அவ் ஒழுங்கு முறை வருமாறு:
  3, 5, 7… ஒற்றைப்படை – பாலை – 200
  8, 12, 18… இரண்டு, எட்டு – குறிஞ்சி – 80
  14, 24… நாலெல்லாம் – முல்லை – 40
  6, 16, 26… ஆறெல்லாம் – மருதம் – 40
  10, 20, 30… பத்தெல்லாம் – நெய்தல் – 40
- முதலில் பதிப்பித்தவர் வே. ராசகோபால ஐயங்கார்
- நூல் முழுவதும் உரை எழுதியவர்கள் நா.மு. வேங்கடசாமி நாட்டார், இரா. வேங்கடசாலம் பிள்ளை

**செய்திகள்**

- குடவோலைத் தேர்தல் குறித்துக் கூறும் நூல் அகநானூறு
- சங்க இலக்கியத்துள் வரலாற்றுச் செய்திகளை மிக அதிகமாகக் கூறும் அகநூல் ஐஅகநானூறுஸ
- வடநாட்டுச் செய்திகள் (நந்தர்கள், மோரியர் படையெடுப்பு, மோரியர்க்கு வடுகர்துணை) கூறும் நூல் அகநானூறு.
- வரலாற்றுச் செய்திகளை மிக அதிகமாகக் கூறும் புலவர்கள் பரணர், மாமூலனார்
- சோழ நாட்டு வருவாய் குடிதையில் வைத்துக் காக்கப்பட்டதி
- பண்டைத் தமிழர் திருமணம் குறித்துக் கூறும் நூல் (86, 136) அகநானூறு
- திங்கள் ரோகிணியுடன் கூடிய நன்நாளில் திருமணம் நடந்தி
- கந்து என்பது வழிபாட்டிற்குரிய மரத்துண்டு
- பங்குனி விழா நடைபெற்றது



The Best Coaching Institute For TNPSC, Bank, SSC, Police Exam, TET Exam, Railways Exams
8939 144 344 www.weshineacademy.com

**மேற்கோள்**

"பல்புகழ் நிறைந்த வெல்போர் நந்தர்
நீர்மிகு பாடலிக் குழீஇக் கங்கை
நீர்முதல் கரந்த நிதியம் கொல்லோ" — மாமூலர்

"நந்தன் வெறுக்கை எய்தினும் மற்றவண்
தங்கலர் வாழி தோழி" — மாமூலர்

"யவனர் தந்த வினைமாண் நன்கலம்
பொன்னொடு வந்து கறியொடு பெயரும்" — எருக்காட்டூர்த் தாயங்கண்ணனார்

"தாதுண் பறவை பேதுறல் அஞ்சி
மணிநா ஆர்த்த மாண்வினைத் தேரோன்" — குறுங்குடி மருதனார்

"யாமே, பிரிவின்றி இயைந்த துவரா நட்பின்
இருதலைப்புள்ளின் ஒருபீர் அம்மே" — கபிலர்

"தமிழ்கெழு மூவர் காக்கும் நிலை" — மாமூலர்

**புறநானூறு**

- புறநூல்
- 400 பாடல்கள்
- அகவற்பா
- 158 புலவர்கள்
- தொகுத்தவர், தொகுப்பித்தவர் பெயர் தெரியவில்லை
- புறம், புறப்பாட்டு, புறப்பு, தமிழ்க் கருலூம் என்ற வேறு பெயர்களும் உண்டு
- கடவுள் வாழ்த்துப் பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார்
- புறநானூற்றின் கடவுள் வாழ்த்துச் சிவனைப் பற்றியது
- தொடரால் பெயர் பெற்ற புலவர்கள்:
  தொடித்தலை விழுதண்டினார் (குழந்தைகளின் நீர் விளையாட்டை ரசித்தவர்), ஜன்பொதி பசுங்குடையார்

**செய்திகள்**

- அறம், பொருள், வீடு என்ற மூன்றையும் பாடும் நூல் புறநானூறு
- பெண்களின் வீரத்தைக் கூறும் துறை முதின் முல்லை
- பெண்கள் உடன் கட்டை ஏறினர்
- பூதப்பாண்டியன் மனைவி கோப்பெரும் பெண்டு உடன்கட்டை ஏறினாள்
- பெண்கள் கைம்மை நோன்பு இருந்தனர்
- மூவேந்தர்கள் சேரசோழ பாண்டியர் (உம்மைத் தொகை)

**அடையாளப் பூ**

சேரன் – போந்தை (பனை)

சோழன் – ஆர் (அத்தி)

பாண்டியன் – வேம்பு

**அடையாளக் கொடி**

சேரன் – வில்

சோழன் – புலி

பாண்டியன் – கெண்டை (மீன்)

**தலை நகரம்**

சேரன் – வஞ்சி

சோழன் – உறையூர் (உறைந்தை), தஞ்சாவூர் (தஞ்சை), உறையூருக்கு "கோழி" என்ற பெயரும் உண்டு



The Best Coaching Institute For TNPSC, Bank, SSC, Police Exam, TET Exam, Railways Exams
8939 144 344 www.weshineacademy.com

பாண்டியன் – மதுரை
பல்லவன் – காஞ்சிபுரம் (காஞ்சி)

**துறைமுகங்கள்**
சேரன் – முசிறி, தொண்டி (ஐங்குநூறு)
சோழன் – காவிரிப்பூம்பட்டினம் (பூம்புகார், புகார்)
பாண்டியன் – கொற்கை, தொண்டி (அகநானூறு)
பல்லவன் – மாமல்லபுரம் (மல்லை)

**வேறுபெயர்கள்**
சேரன் – குட்டுவன், கடுங்கோ, வானவன், வானவரம்பன், கோதை, கோக்கோதை, இரும்பொறை
சோழன் – வளவன், கிள்ளி, செம்பியன்
பாண்டியன் – செழியன், மாறன், வழுதி, மீனவன், தமிழர்பெருமான், கவுரியன்

**சூளுரைகள்**

- என் குடிமக்கள் கொடுங்கோலன் என்று என்னைத் தூற்றட்டும், மாங்குடி மருதன் உள்ளிட்ட புலவர்கள் என் நாட்டைப் பாடாது ஒழியட்டும், இல்லை என்று இரப்போர்க்கு இல்லை என்று கூறும் வறுமை அடைவேனாக – என்று சூளுரைத்தவன் தலையாலங் கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன்
- என் மனைவியை விட்டு நீங்குவேனாக, அவைக் களத்தில் தகுதி அற்றவனை வைத்துக் கொடுங்கோல் செய்வேனாக, நட்பினைத் தப்பியவன் ஆக, பாண்டியர் அரசு மறபிலிருந்து மாறிப் பிறப்பேனாக – என்று சூளுரைத்தவன் பூதப்பாண்டியன்
- பொதுப்பெண்டிர் மார்பில் என் மாலை துவள்வதாக என்று சூளுரைத்தவன் சோழன் நலங்கிள்ளி

**பிற**

- கரிகாலன் போர்செய்த இடம் வெண்ணிப் பரந்தலை நெடுஞ்செழியன் போர் செய்த இடம் தலையாலங் கானம்.
- சேரநாட்டு ஊர் மாந்தை
- நந்தர்களின் ஊர் பாடலிபுத்திரம்
- பல்யானை செல்கெழு குட்டுவனுக்குரிய உம்பர்காடு
- பாரதப் போரில் சோறு கொடுத்தவன் உதியஞ்சேரல்
- சோழர்கள் மொழியர்களைத் தோற்கடித்த இடம் வலம்
- பாரிக்கு உரியது பரம்புமலை

பேகனுக்கு உரியது பழனிமலை
ஓரிக்கு உரியது கொல்லிமலை
ஆய்க்கு உரியது பொதிகைமலை
அதியமானுக்கு உரியது தகடூர்
நன்னனுக்கு உரியது நவிரமலை

- கபிலரை ஆதரித்தவர் பாரி
  ஔவையாரை ஆதரித்தவன் அதியமான்
  பெருஞ்சித்திரனாரை ஆதரித்தவன் குமணன்
  மாங்குடி மருதனாரை ஆதரித்தவன் நெடுஞ்செழியன்

- பிசிராந்தையாரிடம் நட்புக் கொண்டவன் கோப்பெருஞ்சோழன்
- அதியமானுக்காத் தொண்டைமானிடம் தூது சென்றவர் ஔவையார்
- கோப்பெருஞ் சோழனுக்காக அவன் மகனிடம் தூது சென்றவர் புல்லாற்றூர் எயிற்றியனார்.
- நலங்கிள்ளிக்கும் நெடுங்கிள்ளிக்கும் இடையே தூது சென்றவர் கோவூர்கிழார்.
- கண்ணகிக்காகப் பேகனைப் பாடியவர்கள் அரிசில் கிழார், கபிலர், பரணர், பெருங்குன்றூர்கிழார்
- இளங்குமணனின் மனத்தை மாற்றியவர் பெருந்தலைச் சாத்தனார்
- சேரனுக்கும் சோழுக்கும் நடக்கவிருந்த போரைத் தடுத்தவர் மோசியார்



The Best Coaching Institute For TNPSC, Bank, SSC, Police Exam, TET Exam, Railways Exams
8939 144 344 www.weshineacademy.com

- குழாத்தலையார் என்ற புலவரைப் பாடியவர் கபிலர்
- கபிலரைப்பாடிய புலவர் நப்பசலையார்
- பொத்தியார் என்ற புலவரைப் பாடியவர் பிசிராந்தையார்
- மோசி என்ற புலவரைப் பற்றிப் பாடிய புலவர் பெருஞ்சித்திரனார்
- புறநானூறு காட்டும் நான்கு பெருந்தெய்வங்கள் சிவன், கண்ணன், பலதேவன், முருகன்
- பல்யாக சாலை முதுகுடிப் பெருவழுதி வேள்வி செய்ததை குறித்து வேள்விக்குடிச் செப்பேடுகள் கூறுகின்றன
- ஆநிரைகளைக் கவர்வோர் சூடும் பூ வெட்சிப்பூ
- ஆநிரைகளை மீட்போர் சூடும் பூ கரந்தைப்பூ
- மண்ணாசை கொண்டு போர் எடுப்போர் சூடும் பூ வஞ்சிப்பூ
- போர் தடுப்போர் சூடும் பூ காஞ்சிப்பூ
- மதிலைக்காப்பர் சூடும் பூ நொச்சிப்பூ
- மதில் முற்றுகையிடுவோர் சூடும் பூ உழிஞைப்பூ
- பெரும்போரில் இருபெரு வேந்தரும் சூடும் பூ தும்பைப்பூ
- நிலையாமையைக் கூறும் திணை காஞ்சித்திணை
- முனைவர் தேவிரா 59
- நடுகல்லைப் பற்றிக் கூறும் தொல்காப்பிய திணை வெட்சி
- நடுகல்லைப் பற்றிக் கூறும் புறப்பாடல் வெண்பா மாலையின் திணை பொதுவியல்.

**மேற்கோள்**

”இறைஞ்சுக பெருமநின் சென்னி, சிறந்த
நான்மறை முனிவர் ஏந்துகை எடுத்தே” — காரிகிழார்

”வழிபடுவாரை வல்லறி தீவே
பிறர்பழி கூறுவோர் மொழி தேறலையே” — ஊன்பொதி பசுங்குடையார்

”அறவை ஆயின் நினதுஎனத் திறத்தல்
மறவை ஆயின் போரொடு திறத்தல்” — கோவூர்கிழார்

”அறநெறி முதற்றே அரசின் கொற்றம்” — மதுரை இளநாகனார்

”ஒருவனை ஒருவன் அடுதலும் தொலைத்தலும்
புதுவது அன்று இவ் உலகத்து இயுறை” — இடைக்குன்றூர் கிழார்

”வரிசை அறிதலோ அரிதே, பெரிதும்
ஈதல் எளிது” — கபிலர்

”உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றை நிலை முனியாது கறல் நன்றே” — ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்

”உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத்தோரே” — குடபுலவியனார்

இதனை மணிமேகலையும் கூறுகிறது.
”யாதும் ஊரே யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா” — கணியன் பூங்குன்றனார்

”செல்வக் காலை நிற்பினும் கேளிர்
அல்லற் காலை நில்லலன் மன்னே” — கோப்பெருஞ் சோழன்

”சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே
வேல்வடித்துக் கொடுத்தல் வேந்தற்குக் கடனே
களிறுஎறிந்து பெயர்தல் தாளைக்குக் கடனே” — பொன்முடியார்



The Best Coaching Institute For TNPSC, Bank, SSC, Police Exam, TET Exam, Railways Exams
8939 144 344 www.weshineacademy.com

”உண்பது நாழி உடுப்பவை இரண்டே – நக்கீரர்
செல்வத்துப் பயனே ஈதல்
வாழச் செய்த நல்வினை அல்லது
ஆமுங் காலைப் புணைபிறிது இல்லை” — ஔவையார்

**புலவர்கள்**

- மொத்த சங்கப்பாடல்கள் 2381
- ஆசிரியர் பெயர் தெரியாதவை 102
- அகப்பாடல்கள் 1861
- சங்க இலக்கியத்துள் அகப்பாடல்களில் பாலைத்திணைப் பாடல்களே மிகுதி
- மொத்த புலவர்கள் 473 பேர்
- பெண்பாற்புலவர்கள் 30 பேர்:
- ஔவையார், வெள்ளிவீதியார், காக்கைபாடினியார், நற்செள்ளையார், நன்முல்லையார், ஆடுமந்தியார், ஒக்கூர் மாசாத்தியார், நக்கண்ணையார், இளவெயினி, நாகையார் போன்றோர் சிலர்.
- அரச குடும்பத்தினர் பாடியவை 31.
- கோப்பெருஞ்சோழன், பாண்டியன் நெடுஞ்செழியன், அறிவுடை நம்பி, கோப்பெரும்பெண்டு, கணைக்கால் இரும்பொறை அவருள் சிலர்
- நூறு பாடல்களுக்கு மேல் பாடியவர்கள் ஐந்து பேர்:

- கபிலர் – 235
- அம்மூவனார் – 127
- ஓரம்போகியார் – 110
- ஓதலாந்தையார் – 107
- பேயனார் – 105

**கபிலர்**

- பாண்டி நாட்டுத் திருவாதவூரில் பிறந்தவர் (மாணிக்கவாசகர் பிறந்த ஊர்)
- முனைவர் தேவிரா 61
- அந்தணர்
- குறிஞ்சிபாடுவில் வல்லவர்
- “புலன் அழுக்கற்ற அந்தணாளன்“ என்று இவரைப் பாடியவர் நப்பசலையார்
- “பொய்யா நாவிற் கபிலன்“ என்றவர் நப்பசலையார்
- “நல்லிசை வாய்மொழிக் கபிலன்“ என்றவர் நக்கீரர்
- “வெறுத்த கேள்வி விளங்குபுகழ்க் கபிலன்“ என்றவர் இளங்கீரனார்
- “வயங்கு செந்தவின்… கபிலன்“ என்றவர் பெருங்குன்றூர்கிழார்
- பரணர், இடைக்காடர், பாரிவள்ளல் இவர்களின் நண்பர் கபிலர்.
- பாரி வள்ளலின் அவைக்களப் புலவராகவும் இருந்தவர்
- கிளிக் கூட்டங்களைப் பழக்கி நெற்கிர்களைக் கொண்டுவரச் செய்து பஞ்சம் தீர்த்தவர்
- பாரிமகளிரை அழைத்துச் சென்று இருங்கோவேள், விச்சுவகோ ஆகிய மன்னர்களிடம் அப்பெண்களை மணந்து கொள்ள வேண்டியவர்
- பாரியின் மகளிரைப் பார்ப்பாரிடம் அடைக்கலம் கொடுத்தவர்
- கண்ணகியின் பொருட்டுப் பேசுவனை பாடியவர்
- வடக்கிருந்து உயிர் விட்டவர்
- பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க்கணக்கு என்று மூன்றிலும் இவரது பாடல்கள் உள்ளன.
- இலக்கிய வரலாற்றில் ஐந்து கபிலர்கள் உள்ளனர்.

1. பாரியைப் பாடிய சங்ககால கபிலர்.
2. பதினெண்கீழ்க் கணக்கில் இன்னாநாற்பது என்ற நூலைப்பாடிய கபிலர்.
3. பதினோராம் திரு முறையில் இரட்டைமணி மாலை, திருவந்தாதி பாடிய பக்தி இயக்கக் காலக் கபிலர்.



The Best Coaching Institute For TNPSC, Bank, SSC, Police Exam, TET Exam, Railways Exams
8939 144 344 www.weshineacademy.com

4. பன்னிருபாட்டியல் என்ற பாட்டியல் நூலில் சில நூற்பாக்களை இயற்றிய பிற்கால கபிலர்.
5. கபிலர் அகவல் என்ற தத்துவ நூலின் ஆசிரியரான கபிலர்.

**கோவூர் கிழார்**

- ஊர்ப்பெயரும் மரபுப்பெயரும் சேர்ந்து பெயர் பெற்றவர்
- உறையூர்ச் சோழருக்கும் (நெடுங்கிள்ளி) புகார்ச் சோழருக்கும் (நலங்கிள்ளி) இடையில் போர் நிகழாமல் இருக்கத் தூது சென்றவர்.
- நெடுங்கிள்ளியின் தம்பி நலங்கிள்ளி
- அரசுரிமைப் போரில் தோற்று கதவடைத்தவன் நெடுங்கிள்ளி
- முற்றுகையிட்டிருந்தவன் நலங்கிள்ளி
- "அறமையின் திறக்க, மறமையின் அமர்புரிக, இருவரும் வேறல் இயல்பையும் அன்று, தோற்பது நும் குடி" என்று நெடுங்கிள்ளியிடம் கூறிப் போரை நிறுத்தியவர்.
- நெடுங்கிள்ளி இளந்தந்தானார் என்று புலவரை ஒற்றன் என்று கருதித் தண்டிக்க முனைய அப்புலவரைக் காப்பாற்றியவர்
- மலையமான் திருமுடிக்காரியின் குழந்தைகளைக் கிள்ளி வளையானைக்காலில் இட்டுக் கொல்ல முயன்றபோது தடுத்து நிறுத்தியவர்.
- சோறும் நீரும் இரு மருந்து என்று பாடியவர்
- வண்டினை அறுவற்பறவை என்று பாடியவர்.
- பொன்முடியார்
- பெண்பாற் புலவர்
- "ஈன்று புரந்தருதல் என்தலைக் கடனே" என்று கடமைகளைப் பாடியவர்.

**பரணர்**

- கபிலரின் நண்பர்
- வரலாற்றுச் செய்திகளை மிகுதியாகப் பாடியவர்
- கொல்லிப்பாவை, அழிசியின் வரலாறு, பெண்கொலை புரிந்த நன்னன், அதியமான் கோவலூரை வென்றது போன்ற செய்திகளைப் பாடியவர்.
- பதிற்றுப்பத்தில் ஐந்தாம் பத்தில் கடம்பிறக்கோட்டிய செங்குட்டுவனைப் பாடி உம்பற்காட்டு வருவாயையும் அவன் மகன் குட்டுவன் சேரலையும் பரிசாகப் பெற்றார்.

**ஔவையார்**

- ஔவை என்பதற்குத் தாய் என்று பொருள்
- பாண்குடியில் பிறந்தவர்
- 59 பாடல்களைப் பாடியுள்ளார்
- அதியமானின் அவைக்களப் புலவர் ∴ நண்பர்
- அதியமானுக்கும் தொண்டைமானுக்கும் இடையே தூது சென்றவர். "இவ்வே பீலி அணிந்து" என்ற பாடலை அப்போது பாடினார்.
- "இறியகட் பெறினே எமக்கியும் மன்னே
- பெரியகட் பெறினே
- யாம்பாடத் தாம் மகிழ்ந்து உண்ணும் மன்னே"
- என்ற பாடலை அதியமான் இறந்தபோது பாடியவர்.
- அதியமானின் மகன் பொகுட்டெழினியைப் பாடியவர்.
- சோழன் பெருநற்கிள்ளி, சேரமான் மாரிவெண்கோ, பாண்டியன் உக்கிரப் பெருவழுதி ஆகிய மூவரும் சேர்ந்திருந்த காட்சியைப் பாடியவர்
- "நில மணிமிடற்று ஒருவன் போல மன்னுக பெரும்" என்று நெல்லிக்கனி தந்தபோது அதியமானை வாழ்த்தியவர்
- "அணுவைத் துளைத்து எழுகடலை உட்புகுத்திக்
- குறுகத் தறித்த குறள்" என்று திருக்குறளைப் புகழ்ந்தவர் பிற்கால ஔவையார்.



The Best Coaching Institute For TNPSC, Bank, SSC, Police Exam, TET Exam, Railways Exams
8939 144 344 www.weshineacademy.com

- பாரியின் மக்களான அங்கவை, சங்கவை என்ற
- இரு பெண்களையும் திருமணம் செய்து கொடுத்தவர்.
- இலக்கிய வரலாற்றில் ஐந்து ஔவையார்கள் உள்ளனர்.

1. சுட்டகனி வேண்டுமா, சுடாத கனி வேண்டுமா, என்று முருகன் கேட்ட புராண ஔவையார்
2. அதியமானைப் பாடிய புறநானூற்று ஔவையார்
3. ஆத்திசூடி கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி போன்ற சிறுவர் நீதி நூல்களைப் பாடிய சோழர்கால ஔவையார்.
4. தனிப்பாடல் திரட்டில் உள்ள சில பாடல்களைப் பாடிய இடைக்கால ஔவையார்.
5. விநாயகர் அகவல், ஞானக்குறள் பாடிய பிற்கால ஔவையார்

- தாயோடு அறுசுவைபோம் தந்தையோடு கல்விபோம்
  என்று பாடியவர் தனிப்பாடல் திரட்டு ஔவையார்.
- மலைநாடு வேலம் உடைத்து
  சோழ வளநாடு சோறுடைத்து
  பாண்டி நாடு முத்துடைத்து
  தொண்டைநாடு சான்றோர் உடைத்து
  — என்பது ஔவை வாக்கு

**பிசிராந்தையார்**

- பாண்டி நாட்டுப் புலவர்
- பாண்டியன் அறிவுடை நம்பியிடம் சிறுகச்சிறுக வரி வாங்க வேண்டும் என்று அறிவுறுத்தியவர் பிசிராந்தையார்
- குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனிடம் நிலவரியை நீக்கப் பாடியவர் வெள்ளைக்குடி நாகனார்.
- தலைமுடி நரைக்காமலிக்குக் காரணம் சொன்னவர்
- கோப்பெருஞ் சோழனின் நண்பர்
- காணாமலே நட்புக் கொண்டவர்கள்
- கோப்பெருஞ் சோழனுடன் வடக்கிருந்து உயிர்விட்டவர்.



The Best Coaching Institute For TNPSC, Bank, SSC, Police Exam, TET Exam, Railways Exams
8939 144 344 www.weshineacademy.com